# சாதாரணக்கூட்டம்

பல்லடம் நகராட்சி தனிஅலுவலரின் சாதாரணக்கூட்டம் 2018 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 ஆம் நாள் புதன் கிழமை காலை 11.00 மணிக்கு பல்லடம் நகராட்சி அலுவலக நகர மன்றக்கூடத்தில் நடைபெற உள்ளது.

**தனி அலுவலர்,**
**பல்லடம் நகராட்சி**

**பொருள் : 1**

பல்லடம் நகராட்சி வார்டு எண்: 04 செந்தோட்டம் பகுதியில் கழிவுநீர் மற்றும் மழைநீர் வெளியேற வழியில்லாததால் அங்கேயே தேங்கி விடுகிறது. அதனால் நீர்தேக்க தொட்டி அமைத்து அதில் மின் மோட்டார் மூலம் கழிவுநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி பகுதியில் கழிவுநீர் கால்வாய் அமைக்க நாரணாபுரம் கிராமம் க.ச.எண்: 582ல் செந்தோட்ட பகுதியில் பச்சாபாளையம் செட்டியார் தோட்டம் A.ரத்தினசாமி த/பெ அவினாசிக் கவுண்டர் மற்றும் M.வேலுச்சாமி த/பெ மாரப்ப கவுண்டர் ஆகியோர் தங்களுக்கு பாத்தியப்பட்ட இடத்தை 22.01.2018 அன்று நகராட்சிக்கு தானபத்திரம் மூலம் ஒப்படைத்தனர். மேற்படி இடத்தில் மழைநீர்மற்றும் கழிவுநீரை வெளியேற்ற கான்கிரீட் குழாய் பதிக்கவும், புதிதாக மழைநீர் வடிகால் கட்டும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.30.00 இலட்சத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள தனிஅலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 139 /2018/இ1)

**அலுவலக குறிப்பு:**

1. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2017 – 2018 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 2**

பல்லடம் நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வரும் மின் ஆக்கி (Generator)யில் பழுதுகள் ஏற்பட்டுள்ளதால் அதனை உடனடியாக சரிசெய்ய வேண்டியுள்ளது. அதன்படி மேற்படி பழுதினை சரிசெய்வதற்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில், மூன்று விலைப்புள்ளிகள் வரப்பட்டது. இதில் குறைவான விலை விகிதம் வழங்கியுள்ள திருவாளர்கள். St.Marys Engineering, Tiruppur அவர்களிடம் பணி மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதற்கும், செலவினத் தொகை ரூ.6577/–ஐ திருவாளர்கள். St.Marys Engineering, Tiruppur நிறுவனத்திற்கு வழங்கியதற்கும், தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 117 /2017/இ1)

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி பணி மேற்கொண்டதையும், செலவினத் தொகை ரூ.6577/—ஐ வழங்கியமைக்கும் தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் : 3</u>**

இந்நகராட்சி அலுவலக வளாகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள கணினி சேவை மையத்தில் அமைக்கப்பட்டுள்ள கணினிகளுக்கு மின்வசதி செய்ய ஒயரிங் செய்தல் மற்றும் புதிதாக 5 KVA திறனுள்ள தடையில்லா மின்சாதனம் (UPS) பொருத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.50 இலட்சத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள தனிஅலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 117 /2017/இ1)

**<u>அலுவலககுறிப்பு:</u>**

1. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2017 – 2018 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் : 4</u>**

பல்லடம் நகராட்சி வார்டு எண்: 02 பகவதிநகர், முத்துக் கவுண்டர் வீதி, வார்டு எண்: 07 திருப்பூர் சாலை பி.ஏ.பி. வாய்க்கால் முதல் கிருஷ்ணா நகர் வரை, அபிராமி நகர் முதல் வீதி, வார்டு எண்:15 சோமுசெட்டியார் தோட்டம் ஆகிய பகுதகளில் புதிதாக குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதால், அந்தப் பகுதிகளில் உள்ள இணைப்புகளுக்கு குடிநீர் போதிய அளவு அழுத்தம் இல்லாமல் செல்கிறது. எனவே புதிதாக 4'' மற்றும் 3'' ஆகிய புதிய குழாய்கள் மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட பகுதிகளில் புதிதாக 4'' மற்றும் 3'' குழாய்கள் பதிக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.6.50 இலட்சத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள தனிஅலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 117 /2017/இ1)

**<u>அலுவலககுறிப்பு:</u>**

1. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2017 – 2018 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் : 5</u>**

பல்லடம் நகராட்சி வார்டு எண்: 07 இராயர்பாளையம் மயானம் செல்லும் வழியில் புதியதாக கட்டப்பட்டுள்ள மழைநீர் வடிகால் மீது கான்கிரீட் சிலாப்கள் அமைக்கவும் மற்றும் புதியதாக மழைநீர் வடிகால் கட்டும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.8.30 இலட்சத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள தனிஅலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 117 /2017/இ1)

<u>அலுவலககுறிப்பு:</u>

1. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2017 – 2018 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் : 6</u>

திருப்பூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்திற்கு கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் சப்ளை செய்தல் பணிக்கு 14.02.2018 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1. திருவாளர்கள்.டிஜி பிரிண்ட் சர்வீசஸ், சேலம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.38% அதிகம் |
| 2. திருவாளர்கள்.ஸ்பைடர் டெக்னாலஜி, திருப்பூர் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.25% குறைவு |

(ந.க.எண்: 117/2017/இ1)

<u>அலுவலக குறிப்பு :</u>

1. இப்பணிக்கு நகரமன்றம் தனது 15.12.2017 தேதியிட்ட 302 ஆம் எண் தீர்மானத்தில் மதிப்பீடு ரூ.1,65,000/-க்கு அனுமதி வழங்கி உள்ளது.

2. வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.25% குறைவான விலைவிகிதம் அளித்துள்ள திருவாளர்கள். ஸ்பைடர் டெக்னாலஜி, திருப்பூர் அவர்களது ஒப்பந்தப்புள்ளியினை தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் : 7</u>

நகராட்சி பகுதிகளில் தினசரி குடிநீர் வழங்குவதற்காக அடிப்படை குடிநீர் கட்டமைப்புகள் மற்றும் பகிர்மான குழாய்களை மாற்றி அமைக்க திட்ட அறிக்கை தயாரிக்க தனியார் கலந்தாலோசகர் மூலம் பணி மேற்கொள்ளதல் பணிக்கு 14.02.2018 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1. திருவாளர்கள்.எஸ்.பி.டி. கன்சல்டன்சி சர்வீசஸ், சென்னை | மதிப்பீட்டு விலை விகிதம் |
| 2. திருவாளர்கள்.ஆர்.ஆர். ஹர்சி, சென்னை | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 20% அதிகம் |

(ந.க.எண்: 117/2017/இ1)

**அலுவலக குறிப்பு :**

1. இப்பணிக்கு நகரமன்றம் தனது 25.01.2018 தேதியிட்ட 02 ஆம் எண் தீர்மானத்தில் மதிப்பீடு ரூ.10,00,000/-க்கு அனுமதி வழங்கி உள்ளது.

2. வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள்.எஸ்.பி.டி. கன்சல்டன்சி சர்வீசஸ், சென்னை அவர்களது ஒப்பந்தப்புள்ளியினை தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 8**

வார்டு எண்: 11 காளியப்பா நகரில் உள்ள பைப் கல்வெட் பழுதடைந்துள்ளதால், புதிதாக ஆர்.சி.சி. கல்வெட் அமைத்தல் பணிக்கு 14.02.2018 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1. திரு.V.கருப்பசாமி, ஒப்பந்ததாரர், பல்லடம். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.05% குறைவு |
| 2. திரு.P.முருகன், ஒப்பந்ததாரர், பல்லடம். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.70% அதிகம் |

(ந.க.எண்: 117/2017/இ1)

**அலுவலக குறிப்பு :**

1. இப்பணிக்கு நகரமன்றம் தனது 25.01.2018 தேதியிட்ட 01 ஆம் எண் தீர்மானத்தில் மதிப்பீடு ரூ.75,000/-க்கு அனுமதி வழங்கி உள்ளது.

2. வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.V.கருப்பசாமி, ஒப்பந்ததாரர் அவர்களது ஒப்பந்தப்புள்ளியினை தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

**பொருள் 9**

பல்லடம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மங்கலம் ரோடு வார்டு எண் 4,5, 18 ஆகிய வார்டுகளில் சுமார் 2000 உள்ள குடியிருப்புகள் உள்ளன. இப்பகுதியில் கழிவுநீர் வடிவதற்கும் மழைநீர் வடிவதற்கும், போதிய வடிகால் வசதியில்லை . இதனால் அப்பகுதியில் மழைகாலங்களில் கழிவுநீர் தேஙகி சுகாதாரக்கேடு ஏற்படுகிறது. எனவே வார்டு எண் 4,5, மற்றும் 18 ஆகிய பகுதிகளில் தேங்கும் கழிவுநீர் மற்றும் மழைநீரினை வெளியேற்றும் வகையில் கழிவுநீர் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்க நாரணாபுரம் கிராமம் க.ச.எண் 582 ல் அமைந்துள்ள நிலத்தின் வழியே வடிகால் அமைக்கும் நிலையில் மேற்கண்ட பகுதிகளில் தேங்கும் கழிவுநீர் மற்றும் மழைநீர் வெளியேற எளிதாக இருக்கும். வடிகால் அமைக்க பொது மக்கள் நலன் கருதி எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் அப்பகுதியில்

வசிக்கும் நில உரிமையாளர் திரு.ஏ.வேலுச்சாமி மற்றும் திரு.ஏ.ரத்தினசாமி ஆகியோர் தனக்கு சொந்தமான நிலத்தில் 4 அடி அகலத்திற்கு சுமார் 787 ச.அடி நீளத்திற்கு வடிகால் அமைக்க இடம் தானமாக நகராட்சிக்கு வழங்க சம்மதம் தெரிவித்து நகராட்சியின் பெயரில் தானப்பத்திரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிய தானாமாக எவ்வித பிரதிபலனும் இன்றி வழங்கியுள்ளார். ஆவண எண் 694/2018 நாள் 22.01.2018 வரப்பெற்ற தானக்கிரைய பத்திரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்

**அலுவலக குறிப்பு**
மன்றம் ஏற்கலாம்.

**பொருள் 10**

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியலின் கீழ் பயனாளிகள் பயன் பெறும் வகையில் . கீழ்காணும் பயனாளிகளை வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளோர் பெயர் பட்டியலில் சேர்த்து BPL எண் வழங்ககோரி வழங்கிய கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் , பயனாளிகள் பட்டியல தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பெயர் மற்றும் முகவரி | பாலினம் |
|---|---|---|---|
| 1 | 15 | திரு.எம்.ஐ.நாகூர் மீரான்<br>316 , அண்ணா நகர், பல்லடம் | ஆண் |
| 2 | 5 | மாபுபீபி<br>க/பெ அப்துல் ரஹ்மான்<br>5/11 காமராஜ் நகர்<br>மங்கலம் ரோடு பல்லடம் | பெண் |
| 3 | 13 | லட்சுமி<br>க/பெ கண்ணையன்<br>அ.ரிசன காலனி பல்லடம் | பெண் |
| 4 | 16 | சந்திரவதி<br>க/பெ நாகராஜ் ( லேட்)<br>ஜே.கே.ஜே காலனி<br>பல்லடம் | பெண் |

**அலுவலக குறிப்பு**
மன்றம் ஏற்கலாம்.

**பொருள் 11**

இந்நகராட்சியின் 2017-2018 ஆம் ஆண்டிற்குரிய இந்திய செஞ்சிலுவை சங்க உறுப்பினர் ஆண்டு சந்தா தொகை ரூ.2500/- இந்திய செஞ்சிலுவை சங்கத்திற்கு வழங்க தனிஅலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலககுறிப்பு**
தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் : 12</u>**

பல்லடம் நகராட்சிக்குச் சொந்தமான கீழ்கண்டவாறுள்ள ஆண்டு குத்தகை இனங்களுக்கு 21.01.2018 அன்று பொது ஏலம் நடத்தியும், மற்றும் ஒப்பந்தப்புள்ளியும் கோரப்பட்டது. அன்றைய தினம் மேற்படி இனங்களுக்கு உட்சகேள்வி கேட்கப்பட்ட விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண் : 1422 /2014/அ1)

| வ.எ | கடை எண் | ஏலம் எடுத்தவர்களின் பெயர் மற்றும் முகவரி | அரசு மதிப்பு தொகை ரூ. | தற்போதைய உட்சகேள்வி தொகை |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | வாரச்சந்தை சுங்கம் வசூலித்தல் | திரு.பி.ஆர்.அங்குராஜ் 13/21 கொசவம்பாளையம் ரோடு, பல்லடம் | 8,27,000 | 15,00,000 |
| 2 | பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள நவீன கட்டண கழிப்பிடம் | திரு.கலையரசன் திருச்சி ரோடு பல்லடம் | 14,91,000 | 15,75,000 |

**அலுவலககுறிப்பு**

மேற்கண்டவாறு உள்ள விபரப்பட்டியலில் கலம் 5 இல் கோரிய உட்ச கேள்வித்தொகை, கலம் 4 இல் குறிப்பிட்டுள்ள தற்போதைய அரசு மதிப்பை காட்டிலும் கூடுதலாகவும் உள்ளது. எனவே உட்சகேள்வி கோரிய ஏலதாரருக்கு 01.04.2018 முதல் 31.03.2021 முதல் 3 ஆண்டுகளுக்கு பொது ஏல நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு குத்தகை உரிமத்தை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் : 13</u>**

வார்டு எண் 11 , ப.வடுகபாளையம், சின்னையா கார்டன் பகுதியில் குப்பைகள் தரம்பிரிக்கும் கூடம் அமைப்பது தொடர்பாக திரு.எஸ்.நாராயணன் மற்றும் சிலரால் , பல்லடம் நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண் WP No : 34048/2017 ஐ எதிர்த்து வழக்காட சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.பி.ஆனந்த் அவர்களிடம், பல்லடம் நகராட்சி சார்பாக வழக்கு நடத்தவும், வழக்கு கட்டணத்தொகை ரூ.12500/– ஐ வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. ( ந.க.எண் 16/2018/எச்1)

**அலுவலக குறிப்பு**

தனி அலுவலர் அனுமதிக்கலாம்

**பொருள் : 14**

பல்லடம் நகரம், நாரணாபுரம் கிராமம். க.ச.எண் : 399/2பி2 (ப) ல் மனைப்பிரிவு அமைக்க என்.பி.பரமசிவம் மற்றும் மூவர் அனுமதி கோரியதன் பேரில், பல்லடம் நகரம், நாரணாபுரம் கிராமம். க.ச.எண் : 399/2பி2 (ப) ல் அமையவுள்ள மனைப்பிரிவுகளுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கும் பொருட்டு சாலை மற்றும் பூங்கா ஒதுக்கீடுகள் குறிப்பிடப்பட்ட வரைபடம் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ( பொ) கோவை அவர்களிடமிருந்து வரப்பெற்றது. வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள படி தார் சாலைகள் மற்று வடிகால், குடிநீர் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளதாக நகராட்சி பொறியாளர் 20.02.2018 ல் சான்று அளித்துள்ளார். தெருவிளக்கு அமைப்பது தொடர்பாக மின்கம்பத்திற்காக ரூ.185770.00 த.நா.மி வாரியத்திற்கு 29.01.2018 ல் செலுத்தப்பட்டு ரசீது இணைக்கப்பட்டுள்ளது. தெருவிளக்கு அமைக்க ரூ.77000.00, 16.02.2018 ல் நகராட்சியில் செலுத்தப்பட்டுள்ளது. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் தனது 28.02.2017 ம் தேதிய கடிதத்தில் தார் சாலை அமைத்து சாலைகளை நகராட்சியில் ஒப்படை செய்யப்பட்ட தான பத்திர நகல் அனுப்ப தெரிவித்துள்ளார். அதன் படி சாலை மற்றும் பூங்கா ஒதுக்கீடுகளை நகராட்சி வசம் தானமாக ஒப்படை செய்ய மனுதாரர் அனுமதி கோரியுள்ளார்.

மேற்படி உத்தேச மனைப்பிரிவின் சாலைகள் மற்றும் பூங்கா இடத்தினை நகராட்சி வசம் தானமாக பெற்றுக்கொண்டு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு
தனிஅலுவலர் அனுமதிக்கலாம்.

**பொருள் : 15**

பல்லடம் நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை வணிக வளாகத்தில் அமைந்துள்ள கடைகளின் குத்தகை காலம் 31.03.2018 உடன் முடிவடைய இருப்பதால், கீழ்கண்ட விபரப்படி உள்ள குத்தகைதாரர்கள் தங்களால் நடத்தி வரப்பட்ட கடைகளை நகராட்சி வசம் 01.04.2018 முதல் நடத்த இயலாது என தெரிவித்து விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ளார்கள். மேற்படி கீழ்கண்ட கடைகளை ஏலம் கொண்டு தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எ | கடை எண் | ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கோரியவர்களின் பெயர் மற்றும் முகவரி | தற்போதைய உட்சகேள்வி தொகை |
|---|---|---|---|
| 1 | கடை எண் 4/9 | திரு.எ.ரத்தினசாமி<br>7, கிருஷ்ண கவுண்டர் வீதி,<br>பச்சாபாளையம் பல்லடம் | 10500 |
| 2 | **கடை எண் 14/48** | திரு.நா.சுரேஷ்<br>31, ஜே.கே.ஜே.காலனி<br>மாணிக்காபுரம் ரோடு பல்லடம் | 7100 |
| 3 | **கடை எண் 15/48** | திரு.நாச்சி பாலாமணி<br>31, ஜே.கே.ஜே.காலனி<br>மாணிக்காபுரம் ரோடு<br>பல்லடம் | 7100 |

| | | | |
|---|---|---|---|
| 4 | **கடை எண் 17/48** | திருமதி.பி.பழனியம்மாள்.<br>12, பட்டேல் வீதி,பல்லடம் | 9000 |
| 5 | கடை எண் 18/48 | திருமதி.வள்ளியம்மாள்<br>எ1, கிருஷ்ண கவுண்டர் வீதி,<br>பல்லடம் | 7500 |
| 6 | **கடை எண் 19/48** | திரு.தனுஷ்கோடி<br>7, மாணிக்காபுரம் ரோடு<br>பல்லடம் | 7100 |
| 7 | **கடை எண் 20/48** | திருமதி.என்.தனலட்சுமி<br>114, பாரதிபுரம்,பல்லடம் | 7100 |
| 8 | **கடை எண் 21/48** | திரு.எஸ்தாக்<br>9/2 பாலாஜி நகர்<br>செட்டிபாளையம் ரோடு,பல்லடம் | 7100 |
| 9 | **23/48** | ஜெயபால்<br>சங்கரலிங்கனார் வீதி<br>பல்லடம் | 7100 |
| 10 | **26/48** | ரத்தினசாமி<br>கிருஷ்ணப்பகவுண்டர் வீதி<br>பச்சாபாளையம்<br>பல்லடம் | 7100 |
| 11 | **27/48** | எம்.ரங்கசாமிநாயுடு<br>55 வைத்தியநாதபுரம் | 7100 |
| 12 | **கடை எண் 39/48** | திரு.குப்புசாமி<br>த/பெ வலுப்பூரான்<br>64, சமத்துவபுரம்,மாதப்பூர் | 7100 |
| 13 | **கடை எண் 40/48** | திரு.பெருமாள்<br>26/ஏ, பாரதிபுரம் பல்லடம் | 7100 |
| **14** | **கடை எண் 41/48** | திரு.பெரியசாமி<br>261 ஏ, பாரதிபுரம் பல்லடம் | 7100 |
| 15 | கடை எண் 42/48 | திரு.எ.பிரபு<br>5/13, சுபகர்ண சாஸ்திரி வீதி<br>பல்லடம் | 7100 |
| 16 | **கடை எண் 45/48** | திரு.கே.சுந்தராஜ்<br>த/பெ குப்புசாமி<br>115 பாரதிபுரம், பல்லடம் | 7100 |
| 17 | **கடை எண் 7/62** | திருமதி.என்.தமிழ்செல்வி<br>5/44, சேட்டம்மாள் சந்து,<br>பட்டேல் வீதி, பல்லடம் | 2100 |
| 18 | **11/62** | மணிகண்டன்<br>மாகாளியம்மன் கோவில் வீதி<br>பல்லடம் | 2100 |
| 19 | **கடை எண் 19/62** | திரு.எம்.குப்புசாமி<br>த/பெ மாறளன்.<br>ஜே.கே.ஜே.காலனி,பல்லடம் | 5600 |
| 20 | கடை எண் 45/62 | திரு.எ.ஜோசப்<br>21, சங்கரலிங்கனார் வீதி<br>பல்லடம் | 4100 |

அலுவலக குறிப்பு
தனிஅலுவலர் அனுமதிக்கலாம்.

**தனி அலுவலர்,**
**பல்லடம் நகராட்சி**

# <u>சிறப்புக்கூட்டம்</u>

பல்லடம் நகராட்சி தனிஅலுவலரின் சிறப்புக்கூட்டம் 2018 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05 ஆம் நாள் திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு பல்லடம் நகராட்சி அலுவலக நகர மன்றக்கூடத்தில் நடைபெற உள்ளது.

**தனி அலுவலர்,**
**பல்லடம் நகராட்சி**

**<u>பொருள் : 1</u>**

பல்லடம் நகராட்சி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு வரைவு மறுவரையறை ஆணையம், தமிழ்நாடு அவர்களின் கடிதம் ந.க.எண் 3174/2017/தேபொ1 நாள் 19.10.2017, 07.12.2017, 13.12.2017 ஆகியவற்றில் தெரிவித்துள்ள வழிகாட்டுதல் படி வரைவு மறுவரையறை கருத்துருக்கள் , படிவங்கள் மற்றும் வரைபடங்கள் ஆகியன தயார் செய்யப்பட்டு, நகர்மன்ற தீர்மான எண் 274/2017 நாள் 15.12.2017 இல் நகர்மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டது. வரைவு மறுவரையறை உத்தேசங்கள் மாநில தேர்தல் ஆணையம், சென்னை அவர்களிடம் ஒப்புதல் பெறப்பட்டு பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது. வரைவு மறுவரையறை உத்தேசங்கள் தொடர்பாக ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் பொது மக்கள் மற்றும் அரசியல் கட்சிகளிடமிருந்து 9 எண்ணிக்கை பெறப்பட்டது.ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் தொடர்பான மண்டல வாரியான கூட்டம் 01.02.2018 அன்று நடைபெற்றது . பெறப்பட்ட ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் வார்டு எண் 11 ல் என்.ஜி.ஆர். ரோடு சேர்ப்பது தொடர்பான கோரிக்கை மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பிற கோரிக்கைகள் அரசு வழிகாட்டுதலுக்கு முரணாக இருந்ததால் நிராகரிக்கபட்டது. தற்போது மாற்றியமைக்கப்பட்ட உத்தேசங்கள் உறுப்பினர் செயலர், மறுவரையறை ஆணையம்,சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 3174/2017/ஈஜி/1. நாள் 31.01.2018 ம் தேதிய கடிதத்தின் படி உரிய வழிகாட்டுதலின் படி தயார் செய்யப்பட்டுள்ளது. பல்லடம் நகராட்சியின் 18 வார்டுகளுக்கான மறுவரையறை கருத்துருக்கள் மற்றும் வரைபடங்கள் தயார் செய்யப்பட்டு தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. ( ந.க.எண் 1032/2016/அ2)

**<u>அலுவலககுறிப்பு</u>**
தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

தனி அலுவலர்
பல்லடம் நகராட்சி